கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.54/2022

அ.சா.3 (LW3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **முருகன்** | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | **பெரியசாமி** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **10.02.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அச்சராஜக்காபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசனாக வேலை செய்து வருகிறேன். இறந்துபோன கருப்பையாவை எனக்கு தெரியும். சாட்சி கங்காதரனை தெரியும். சாட்சி கோபிஆனந்த் தெரியும். எதிரிகளை தெரியும். 14.06.2021ம் தேதி காலையில் எனக்கு தொலைபேசியில் கங்காதரன் பேசினார். சந்தோஷ், சிரஞ்சீவி, கருப்பையா, கங்காதரன் ஆகியோருக்கிடையே அச்சராஜக்காபட்டி முணியப்பன் கோவில் அருகில் சண்டை நடந்துகொண்டியிருப்பதாகவும் என்னை வரும்படி சொன்னார். அன்றைய தினம் என்னுடைய அண்ணன் மகன் திருமணம் நடைபெற்று வருவதால் திருமணம் முடிந்து வருகிறேன் என்று சொன்னேன். அன்றைய தினம் 4.30 மணியளவில் வீட்டிலிருந்து பாலகிருஷ்ணாபுரம் நோக்கி சென்று கொண்டியிருந்தேன். மாலைப்பட்டி பிரிவில் சென்றுகொண்டுயிருக்கும் பொழுது கருப்பையா கீழே கிடந்தார். நான் கருப்பையாவை தூக்கி பார்த்தேன் அப்பொழுது கருப்பையாவுக்கு நெஞ்சில் கத்தி காயம் இருந்தது. அப்பொழுது கோபிஆனந்தின் ஆட்டோ வந்தது. கங்காதரனுக்கும் முதுகு பின்னால் கத்தி குத்துயிருந்தது. கங்காதரனிடம் என்ன என்று கேட்டேன் அதற்கு இரண்டு முருகேசனும் கருப்பையாவை பிடித்து கொண்டதாகவும், சிரஞ்சீவி கத்தியால் கருப்பையாவை குத்தியதாகவும் சொன்னார். கோபிஆனந்தனின் ஆட்டோவில் கருப்பையாவையும் கங்காதரனையும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவர் பரிசோதனை செய்து கருப்பையா இறந்துவிட்டதாக தெரிவித்தார். போலீஸ்சார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.11 14:06:10 +0530

Additional District Judge,

Dindigul.